# 2014

# செயலாற்றுகை அறிக்கை

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

# புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் தொலைநோக்கு

நற்பண்புகள் நிறைந்த நல்லதொரு சமூகத்தை உருவாக்குவதில் முதன்மை மிக்கவாறாக ஆகுதல்

## பணிக்கூற்று

"பௌத்தமதம் அடங்கலாக அனைத்து மதங்களையும் கற்பிப்பதன் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்ட்களை வகுப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறந்த வாழ்கைத் தரத்தைக் கொண்ட நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்குத் துணைபுரிதல்."

**புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் பிரதான செயலாற்றுகைச் சுட்டி**

- சமயப் பெறுமானங்களை கொண்ட 25000 குடும்பங்களை சமூக மற்றும் பொருளாதார ரீதி யில் வலுப்படுத்தல்.
- சமய வழிபாட்டுத்தலத்திற்கும் சமூகப் பிரஜைகளுக்குமிடையேயான தொடர்புகளை வலுப் படுத்தும் நோக்குடன் அதற்குப் புதிய முறையிலமைந்த உடன்பாடான மனப்பாங்கை மேம் படுத்தும் ஆளுமை விருத்தியுடன் கூடிய அறக்கல்வி வலையமைப்பொன்றை புனரமைத்தல்.
- அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களையும் தகவல் தொழில் நுட்பத்துறையில் வலுப் படுத்தி பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் நிலையமாக செயற்படுதல்.
- சமய வழிபாட்டுத் தொகுதிகளை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கக் கூடிய வகையில் மக்கள் மனங்களை வென்ற நிலையமாக மாற்றியமைத்தல்.
- எமது பாரம்பரியத்தைப் பேணி எதிர்காலச் சந்ததியினருக்கு அதனைக் கொண்டு செல்லும் நுழைவாயிலாக முறையான பௌதீக விருத்தியைக் கொண்ட சமய வழிபாட்டுத்தலமாக அதனைப் புனரமைத்தல்.
- சமய வழிபாட்டுத்தலங்கள் வலுப்பெறும் விதத்தில் சிறந்த வெளிப்படைத் தன்மையைக் கொண்டதாக தொழில்நுட்பத்தைக்கொண்ட கணக்காய்வும் பரிசீலனையும் உள்ள முறையிய லும் உள்ள நன்னம்பிக்கை நிதியங்களை நிறுவுதல்.

உள்ளடக்கம்

**விடயம்** **பக்க எண**


1. அறிமுகம் மற்றும் பக்கத் தோற்ற விபரங்கள் 33-34

2. பௌதீக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 35-36

2.1 விகாரைகளுக்கு நிதியுதவி பெற்றுக் கொடுத்தல்

2.2 விசேட நிர்மாணங்கள்

2.2.1. நேபாளத்தில் லும்பிணி விகாரை நிர்மாணம்

2.2.2. நேபாளம் லும்பிணி நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள துட்டகைமுனு யாத்திரிகள் விடுதியை புனரமைத்தல்

2.2.3. வித்யாலங்கார தேசிய பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணம்

2.2.4. அநுராதபுரம் குறுந்தம் குளம் ரஜரட்ட சுற்றுலா விடுதி

2.2.5 மகாவலி மஹாசேய - கொத்மலை

3. ஆன்மீக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 37-40

3.1 புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம்

3.2 போதை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் (மதட்ட தித)

3.3 வேறு மொழிகள் முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

3.4 இந்து பௌத்த சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டம்

3.5 நேர்மையான குடும்பமும் எமது தனித் தன்மையுடன் கூடிய நாளைய தினமும்

4. சமயத் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 40-42

4.1 சமயத் தொடர்பாளர் பிக்குமார்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்

4.2 பிக்குணிமார்களின் ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

5. புனித பூமிகள் அபிவிருத்தி 42

6. விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் 43

6.1 2600 சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு 3600 அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

6.2 பௌத்த நாளேடுகளை அச்சிடுதல்

6.3 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

07. இணைப்புப் பிரதிகள் 44-52

## 01. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு புத்தசாசனத்தைப் பாதுகாத்தல், போஷித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு தேவையான நிதியுதவி வழங்குவது போன்றே ஏனைய அனைத்து மதங்களினதும் உரிமைகளை பாதுகாப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்த நோக்கததை வெற்றி அடையச் செய்வதன் பொருட்டு சகல சமயங்களையும் பிரிதிநிதிப் படுத்தும் விதத்தில் நாட்டின் அனைத்து சமயங்களையும் அரவணைக்கும் விதமாக நற்பண்புகள் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான பழக்க வழக்கங்களை முன்னெடுப்பது புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் கடமையாகும். இதற்கமைய புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சானது இலங்கையிலுள்ள ஏனைய அமைச்சுக்களையும் விட இயல்பாகவே விசேடமானதொரு அரச நிறுவனமாக விளங்குகின்றது.

சமூக விழுமியங்களால் நிறைந்த ஒழுக்க மேம்பாடுடைய பிரசைகளைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான பணிகளை காலம் தாழ்த்தாது முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய இந்த நோக்கத்தை அடைவதன் பொருட்டு புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சானது அதன் கீழ் செயற்படும் திணைக்களங்களுடன் இணைந்து பல முன்மாதிரியான நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கமைய எமது நாட்டிலுள்ள அனைத்து மதங்களினதும் மேம்பாட்டின் பொருட்டும், மத ஒற்றுமையின் பொருட்டும் அந்தந்த மதங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வணக்கத்திற்குரிய மதகுருமார்கள் மற்றும் மதத் தலைவர்களின் அற நூல்கள். சமயச்ச சொத்துக்கள், வரலாற்று அரும் பொருட்கள் போன்ற அனைத்துப் பணிகளிலும் மேம்பாடு கருதி புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சானது தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

**பக்கத் தோற்ற விபரங்கள்**

இந்து மகா சமுத்திரத்தின் முத்து எனப் பெயர் பெற்ற எமது இலங்கை நாடானது இந்திய உப கண்டத்துக்குத் தெற்கே 65610 சதுரக் கிலோமீட்டர் பரப்பளவினைக் கொண்டதாக அமைந்த தீவாகும். சனத்தொகை 20 மில்லியன்களாக இருப்பதோடு இதில் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பலதரப்பட்ட 23 மக்கள் சமூகங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. சமய ரீதியாக இலங்கையை அடையாளப்படுத்துவோமாயின் பௌத்தம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் எனும் நான்கு சமூகங்களை பிரதானமாகக் கொண்டதாக அறிய முடியும்.

இலங்கையின் முக்கிய சமயங்களைச் சேர்ந்த மக்களுள் 71% பேர் பௌத்தர்களாக இருப்பதுடன் 12% வீதமானோர் இந்துக்களாவர். எஞ்சியுள்ள சனத்தொகையில், முஸ்லிம் கள் 9% ஆக இருப்பதுடன் மற்றும் கிறிஸ்தவர்கள் 7% வீதமானோர் ஆவர். சகல பிரசை களுக்கும் தாம் விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் கிடைத்திருப்பதுடன், மக்களுக்கு மிக இலகுவாக தமது ஆன்மீகத் துறையைப் போஷித்துக் கொள்வதற்காக அவர்களுக்கு ஒத்தாசையாக புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சானது சகல சமயங்களுக்காகவும் பௌதிக அபிவிருத்திக்காக சமயத் தல அபிவிருத்தி மற்றும் எல்லாச் சமயங்களையும் மையமாகக் கொண்ட ஒழுக்க விழுமிய அபிவிருத்தி வேைத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

பௌத்த சமய மக்களுக்காக பௌத்த சமயத் தலங்கள் 11,132 உம், இந்து மக்களுக்காக இந்து சமயத் தலங்கள் 6051 உம், முஸ்லிம் சமயத்தவர்களுக்காக முஸ்லிம் சமயத் தலங்கள் 1,831 உம், கிறிஸ்தவ சமயத்தவர்களுக்காக கிறிஸ்தவ சமயத் தலங்கள் 2099 உம் நாடெங்கணும் வியாபித்து உள்ளன. (வரைபு இலக்கம் 03 ஐ பார்க்கவும்)

அறநெறிக் கல்வியை மொத்தமாகக் கருத்திற் கொள்ளும் போது 2013 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014ம் ஆண்டில் அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பவற்றை வெவ்வேறான முன்னேற்றப் பருவத்தைக் காட்டுகின்றது. ஆயினும் கிறிஸ்தவ அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பன 2013 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014ம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டுகிறது. (வரைபு இலக்கம் 04 ஐ பார்க்கவும்)

## 02. பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

### 2.1 விகாரைகளுக்கான நிதியுதவி வழங்குதல்

ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்றின் பால் மக்களை எடுத்துச் செல்லும் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக விகாரைகளின் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையிலுள்ள விகாரைகளை பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்வது இதன் மூலம் நடைபெறுகிறது. 2014 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற மொத்த நிதி ரூ. 14.2 மில்லியன்களாவதோடு அதில் 2014.12.31 திகதி வரை ரூ. 14.2 மில்லியன்கள் ஆகும் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை 142 ஆகும். ( இணைப்பு – 05 பார்க்கவும்)

### 2.2 **விஷேட நிர்மாணங்கள்**

#### 2.2.1 **நேபாளம் லும்பிணி விகாரை**

நேபாளத்தின் லும்பிணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் லும்பிணி சல் பூங்காவனப் பகுதியில் அனைத்து பௌத்த நாடுகளும் தத்தமது கலாசாரத் தன்மைகளுடன் கூடிய விதத்தில் பௌத்த வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கான நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையின் பௌத்த கலாசாரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகை யில் விகாரை ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் தம்பதிவ யாத்திரைக்காக செல்லும் இலங்கையர்களுக்கும் வெளிநாட்டவர்களும் வழிபாடு செய்யும் வகையில் இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு இந்த விஹாரைத் தொகுதிக்குரிய நீர் அகழி, நுழைவுப் பாதை, மகரத் தோரணம், சந்திர வட்டக்கல், ,இருபத்தெட்டு புத்த பகவான் கூடங்கள் கொண்ட போதி கர, தங்க வேலி, மூன்று மாடிக் கட்டிடம், மலர் ஆசனம், மேகப் பின்னணி, மகாநாட்டு மண்டபம், நூல் நிலையம், விஹாரையின் சுவரோவியங்கள் மற்றும் தூபிகள் நிரமாணிக்கப்பட்டுள்ளன.

விஹாரையின் நுழைவுப் பாதையில் பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன் அதன் பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக 2014ம் ஆண்டு 5.0 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.

#### 2.2.2 **நேபாளத்தின் லும்பிணி நகரத்தில் நிறுவப்பட்டுள்ள துட்டகைமுனு யாத்திரிகர் விடுதியைப் புனரமைப்புச் செய்தல்.**

நேபாளத்தின் லும்பிணி புனித பூமிப் பிரதேசத்தில் வழிபாட்டிற்காகச் செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் உபயோகத்துக்காக ‘‘துட்டகைமுனு யாத்திரிகர் விடுதி’’ எனும் பெயரில் யாத்திரிகர் விடுதி ஒன்று 1992ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. நேபாளம் லும்பிணி அபிவிருத்தி நிதியத்தினால் லும்பிணி அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்பட்ட காணியில் அப்போதைய இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இந்த யாத்திரிகர் விடுதி நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

இந்த யாத்திரிகர் விடுதி 31 தங்கும் அறைகளையும், சேவை அறைகள் 06 உம், அறநெறி மாநாட்டு மண்டபங்கள் 03 உம், சமையலறையொன்றும் சேவையாளர் விடுதியையும் கொண்டது. 2014.11.25 அன்று இந்த யாத்திரிகள் விடுதி அப்போதைய மேதகு சனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டதுடன் புனரமைப்புப் பணிகளுக்காக செலவழிக்கப் பட்ட மொத்தத் தொகை 138.0 மில்லியன் ரூபாய்களாகும்.

2.2.3 **வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல்**

பௌத்த தத்துவம் தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு பிக்குமார்களும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் வகையில் சர்வதேச மட்டத்திலான கருத்தரங்கு மண்டபம் ஒன்றின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் அமைந்த 1200 ஆசனங்களைக் கொண்டமைந்த அதி நவீன மாநாட்டு மண்டபமொன்று பேலியகொடை வித்தியாலங்கார பிரிவென் பூமியில் நிறுவப்பட்டுக்கொண்டு வருகிறது.

2013 இல் இக்கட்டிடத்தின் V ம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2014ம் ஆண்டு ஆகும் போது இதற்கென செலவழிக்கப்பட்டுள்ள நிதி 119 மில்லியன் ரூபாய் களாகும்.

2.2.4 **அநுராதபுரம் குறுந்தம்குளம் ரஜரட்டை சுற்றுலா விடுதி**

பலதரப்பட்ட அரச அலுவல்களுக்காகவும் அநுராதபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித பூமியைத் தரிசிப்பதற்காக வருகை தரும் அரச உத்தியோகத்தர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அநுராதபுரம் மிகிந்தலை பிரதான வீதியில் குறுந்தம் குளம் பிரதேசத்தில் ஒன்பது அறைகளுடனும் ஒரு கேட்போர் கூடத்துடனும் கூடிய விதத்தில் இரண்டு மாடி யாத்திரிகர் விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு 1334 பேருக்கு இங்கு தங்குமிட வசதி வழங்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூ. 449,718.78 ஆகும். (இணைப்பு 06 ஐப் பார்க்கவும்)

2.2.5 **மகாவலி மகா சேய – கொத்மலை**

மகாவலி கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டபோது அகற்றப்பட்ட 21 பௌத்த விகாரை களுக்குப் பதிலாக ருவன்வெலி மகாசேயவை விடவும் இரண்டு அடிகள் உயரம் குறைவாக மகாவலி மகா சேயவை புதிய தொழில்நுட்ப முறையில் நிர்மாணிக்கும் பணியானது 1983.03.20 காலப்பகுதியில் பதவியில் இருந்த மகாவலி அபிவிருத்தி அமைச்சர் அமரர் கௌரவ காமினி திஸாநாயக்க அவர்களின் யோசனைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் இதன் சதுர வடிவத்த்திலிருந்து கோபுரத் தூபி முகப்பு வரை நிர்மாணப் பணிகள் மகாவலி கலாசார நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது.

2014ஆம் ஆண்டில் இதற்கென ரூபா 23.0 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.

**03. கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்**

3.1 **புண்ணிய கிராமம் நிகழ்ச்சித்திட்டம்**

**3.1.1 நோக்கம்**

1. விஹாரைத் தலங்களுக்கும் கிராமத்துக்கும் இடையில் சிறப்பான உறவை ஏற்படுத்தல்
2. குற்றச் செயல்களைப் பற்றிய அச்சமின்றி மிகப் பாதுகாப்பான சூழலில் வாழ்வதற்காக ஒன்றிணைந்த அபிவிருத்தி அணுகுமுறை ஒன்றைக் கிராமத்தினுள் ஸ்தாபித்தல்
3. ஒழுக்க விழுமியங்களை மதிக்கும் மனித நேயமான சமூகம் ஒன்றை ஸ்தாபித்தல்
4. விஹாரைத் தலத்தில் அடிப்படையான விகாரை வளாகமொன்றை உருவாக்கல்
5. விஹாரைத் தலத்தை கேந்திரமாகக் கொண்டு கிராமியத் தரவுத் தொகுதி ஒன்றைப் பேணுதல்.

### 3.1.2 செயற்படுத்தும் முறையியல்

இந்த நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள காவல்துறை பிரதேச மட்டங் களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கஷ்டப் பிரதேச வணக்கத் தலங்களையும் அத்தகைய கிராமங்களையும் அபிவிருத்தி செய்தவாறு இலங்கைப் பொலீஸ், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றுடன் இணைந்து செயற்படுத்தப்படும். இங்கு கிராமிய மட்டத்தில் தன்னார்வ செயற்பாட்டாளர்கள் 10 பேர் வீதம் தெரிவு செய்து அதன் பயிற்சியை வழங்கி அவர்கள் மூலம் செயற்றிட்டத்தின் இலக்குகளை அடைவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலீஸ் நிலையங்களில் உள்ள சமூகத்தினரை பொலீஸ் மா அதிபரின் மூலம் செயற்றிட்ட நடவடிக்கைச் செயல்முறைகளை வலுவூட்டுவதுடன் பொலிஸ் நிலைய அதிபர், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர், பிரதி பொலீஸ் மா அதிபர் ஆகியோர் மூலம் செயற்றிட்டம் கண் காணிப்பும் பின்தொடர்வும் செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 73 கிராமங்களில் செயற்படுத்தப்படுவதுடன் முழுச் செயற்றிட்டத்தின் இணைப்பாக்கமும் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் மூலம் நடாத்தப்படும் (அட்டவணை இல. 07ஐப் பார்க்கவும்)

### 3.1.3 நிதியுதவி வழங்குதலின் தன்மை

நிதியுதவி வழங்கும் போது பிரதான விகாரையொன்றுக்காக ரூ. 150,000.00 நிதி வழங்கப்படும்.

### 3.1.4 செலவு விபரம்

புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டத்துக்காக மீண்டு வரும் செலவுகளுக்காக ரூ. 2.94 மில்லியன்களும் மூலதனச் செலவுகளுக்காக ரூ. 19.55 மில்லியன்கள் என்றவாறாகவும் 2014ம் ஆண்டுக்காக ரூ. 22.49 மில்லியன்கள் செலவழிக்கப்பட்டுள்ளன. (அட்டவணை இல. 08 ஐப் பார்க்கவும்)

## 3.2. போதை ஒழிப்பு (மதட்ட நிதி) நிகழ்ச்சித் திட்டம்

### 3.2.1 பின்னணி

புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சினால் “போதைப் பாவனையற்ற சமூக மொன ்றுக காக ” இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தபட்டு வருகின்றது. 2007ம் ஆண்டில் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சுக்கு இணைப்பாக தேசிய போதை ஒழிப்பு செயலணிப்பிரிவு தாபிக்கப்பட்டு இன்று வரையில் தொடர்ந்தும் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.2.2 நோக்கம்

போதை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதினூடாக மக்களுக்கு போதையினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்து அவர்களை நாட்டின் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுத்துவதினூடாக அபிவிருத்தியடைந்த நாட்டில் நற்பண்புகளைக் கொண்ட மக்களை கொண்டமைந்ததாக கட்டியெழுப்புவது பிரதான நோக்கமாகும்.

### 3.2.3 செயற்படுத்தும் முறை

போதைப் பொருட்கள், புகையிலை உள்ளடங்கலான போதை வஸ்து பாவனையைப் படிப்படியாகக் குறைத்தல், அவற்றைப் பாவிப்பதால் ஏற்படும் தீங்குகளைக் குறைத்தல்

மற்றும் சட்ட விரோத போதைப் பொருட்களை முழுமையாக இல்லாமற் செய்தல் மூலம் இலங்கையரின் சுகாதார மற்றும் சுக வாழ்வை மேம்படுத்தவும், உற்பத்தி வழளைவிறனை அதிகரிக்கவும் வறுமையை ஒழிக்கவும் மற்றும் போதை வஸ்துக்கள் உபயோகிப்பதால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்படும் தீங்குகள் தொடர்பாக பொது மக்களைச் சரியாக அறியச் செய்தல்.

### 3.2.4 செலவு விபரம்

2014 ஆம் வருடத்திற்கெள ரூ. 11.0 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. (வரைபு இலக்கம் 09 ஐ பார்க்கவும்)

## 3.3 வேறு மொழிகள் முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

### 3.3.1 அறிமுகம்

புத்த தர்மத்தின் நிலையிறுதிற்கும் பாதுகாப்பிற்கும் வேண்டி தற்போதைய சமூகத்தில் புத்த பிக்குமார்களுக்கு அந்நிய மொழிகள் பற்றிய அறிவும் விளக்கமும் மிகவும் இன்றியமை யாததாகவுள்ளது. இதன் பொருட்டு எம் நாட்டில் வாழும் பௌத்த, இந்து மக்களைப் போன்று புத்த தர்மம் பின்பற்றப்படும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த மக்களிடையேயும் தர்ம நெறியை பரப்புவதன் பொருட்டு தமிழ், ஆங்கிலம், பாளி, மற்றும் சமஸ்கிருத மொழி களைப் பிக்குமார்களுக்கு கற்பிப்பதற்கும் அவர்களின் மொழி அறிவை விருத்தி செய்வதற் கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 3.3.2 நோக்கம்

தர்மப் பிரசாரப் பணிகளின் பொருட்டு பிக்குமார்களின் மொழி ஆற்றலை மேம்படுத்துவதும் முறையான மொழி அறிவைப் பெற்றுக் கொடுப்பதும் ஆகும்.

### 3.3.3 செயற்படுத்தும் முறை

அநுராதபுரம் பிக்குமார் பல்கலைக்கழகம், அகலவத்த தேசிய மொழிகள் பற்றிய கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கேகாலை சணச கல்வி நிலையம் என்பவற்றை மையமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது முழு நேர வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமாகும்.

### 3.3.4 செலவிடப்படும் விதம்

2014ம் ஆண்டுக்கென 3.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2014.12.31 தினம் வரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 355,434.00 ஆகும்.

## 3.4 இந்து பௌத்த சமய சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம்

### 3.4.1 அறிமுகம்

முப்பது வருடங்களாக இடம் பெற்ற கொடிய யுத்தம் முடிவிற்கு வந்ததன் பின்னர் சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேம்படுத்துவது எமது நாட்டை சமாதானச் சூழலைக் கொண்ட நாடாகப் பேணுவது மிக இன்றியமை யாததாகும். இந்து, பௌத்த ஒத்தாசை நிகழ்ச்சித் திட்டம், அதற்கான நீண்டகாலப் படிமுறையாக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுள் ஒன்றாகும். இந்து மற்றும் பௌத்த மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஓர் யுக்தியாக இந்து மற்றும் பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே இந்நிகழ்வு நடாத்தப்படுகின்றது. இந்து மற்றும்

பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுள் அவ்வந்த சமய கலாசார நெறிகளை அறிந்து கொள்வதன் மூலமும் எதிர்காலத்தில் ஒற்றுமையாக வாழக்கூடியதோர் சந்ததி யைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்வானது முன்னெடுக்கப்படுகின்றது.

### 3.4.2 நோக்கம்

சிங்களம் மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையே ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்கான ஒரு வழிமுறையாக பௌத்தம மற்றும் இந்து சமயங்களில் கூறப்படும் ஆன்மீகக் கருத்தாழங் களைப் பயன்படுத்தல் 'இனிய வசந்தம்' எனப்படும் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 3.4.3 செயற்படுத்தும் விதம்

ஒரு நிகழ்ச்சித் திட்டம் மெதிரிகிரிய, திருகோணமலை ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது. அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

### 3.4.4 செலவின் தன்மை

2014 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட நிதி ரூ. 02.395 மில்லியன்கள் ஆகும். 2014.12.31 ஆம் திகதிக்கு முழு ஒதுக்கீடும் செலவிடப்பட்டது.

## 3.5 நேர்மையான குடும்பமும் எமது தனித் தன்மையுடன் கூடிய நாளைய தினமும்

### 3.5.1 அறிமுகம்

சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக முன்னெடுக் கப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டமானது மக்களை இலக்காகக் கொண்டு அவர்களின் சக பங்களிப்புடன் அவர்களது குடும்ப சமூக நிலைமைகளை மேம்படுத்துவதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும்.

### 3.5.2 நோக்கம்

- குடும்பத்தின் மூலம் தம் அன்றாட பாவனைக்குத் தேவையான உணவுப் பொருட் களைத் தாமே உற்பத்தி செய்தல்.
- சமூக கலாசார ரீதியில் இலங்கையர் என்ற தனித்தன்மையை பிரதிபலிக்கும் வகையிலான குடும்பத்தைப் புனரமைத்தல்.
- அனைத்து சமயங்களும் கற்பிக்கின்ற சமய மற்றும் சமூக நற்பண்புகளை ஒவ்வொரு குடும்பத்தினூடாகவும் சமூகத்திற்கு வழங்குதல்.
- சமூக அடிப்படையான இயக்கங்களில் தனி நபர் செயற்பாடுகளை செயல் ரீதி யான மட்டத்துக்கு கொண்டு வருதலும் அந்தந்த பிரதேசங்களின் தேவை களுக்கேற்ப செயற்படப் பழக்குதலும்.
- இளம் தலைமுறையினரை போதைப்பொருளுக்கு அடிமையாவதைக் குறைப்பதன் பொருட்டு தற்போது போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவர்களின் எண்ணிக் கையைக் குறைத்தல்.
- தொற்று நோய்களுக்காக குறைந்த பட்ச நிதியைச் செலவிடும் குடும்பத்தை தோற்றுவித்தல்.
- தமது பிரதேசத்தின் அங்கவீனர்களின் பாதுகாப்புக்கும் வாழ்வுக்கும் செயல் ரீதியாக முன்வரும் நபர்கள் இருத்தல்
- குடும்பத்தில் சேமிப்பை விருத்தி செய்தல்
- மும்மொழிகளையும் எழுதவும் வாசிக்கவும் தெரிந்த நபர்களைத் தோற்றுவித்தல்.

- தாவர வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு செய்ரீதியாக செயற்படும் நபர் களைத் தோற்றுவித்தல்.

### 3.5.3 செயற்படுத்தும் முறை

பிரதேச செயலாளர்களினதும் மத குருமார்களினதும் ஊடே நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

### 3.5.4 செலவு விபரம்

2014 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நிதி ரூ. 40 மில்லியன்களாகும். 2014.12.31 ஆம் திகதிக்கு செலவு ரூ. 40 மில்லியன்கள் ஆகும்.

## 04. மதகுருமார்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

### 4.1 பிக்குமார்களின் சிந்தனை மேம்பாட்டு நிகழ்வுகள்

### 4.1.1 பின்னணி

விகாரையையும் பிக்குமார்களையும் பிரதானப்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட இலங்கை மக்க ளின் கலாசாரத்தில் பௌத்த பிக்குமார்களுக்கு உரித்தாவது மிகச் சிறப்பான இடமாகும். இதற்கமைய பௌத்த பிக்குமார்களின் கல்வி அறிவு, சமூகத் தொடர்புகளை நல்ல முறை யில் நடாத்துதலில் காட்டப்படும் திறமையைப் போலவே மக்கட் சமூகம் எதிர்பார்க்கும் சடங்குகளை நிறைவேற்றுவதில் அவர்கள் வெளிப்படுத்தும் முதிர்ச்சி போன்ற விடயங்கள் இலங்கைச் சமூகத்தின் நல் வாழ்வில் நேரடியாகவே தாக்கஞ் செலுத்தும். இந்த நிகழ்ச்சித் திட்டம், விகாரையானது கிராமத்துடன் கொண்டுள்ள தொடர்பை வலுவூட்டும் நோக்கத் துடனும் தலைமைத்துவப் பண்புடன் கூடிய பிக்குமார்களை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்றது.

### 4.1.2 அடிப்படை நோக்கம்

- பிக்குமார்களின் தர்ம அறிவை மேம்படுத்துவதற்கு துணை புரிதல்.
- பிக்குமார்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சிறந்த மட்டத்துக்குக் கொண்டு வருவதற்குச் செயற்படும் நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- கிராம மற்றும் விகாரைக்கிடையில் நிலவும் உறவை மேலும் தொடர்ந்து நிலைப்ப தற்கும் அத் தொடர்பை இன்னும் மேம்பாடான மட்டத்துக்கு கொண்டு வருவதற்காக புதிதாக துறவறத்தில் இணையும் பிக்குமார்களின் அறிவை மேம்படுத்துதல்.
- சமூகத்தின் அனைத்துப் பணிகளின் போதும் விஹாரையை முதலிடத்தைப் பெறும் வகையில் தலைமைத்துவப் பண்புடன் கூடிய பிக்குமார் சமூகமொன்றைத் தோற்றுவிக்கக் கைகொடுத்தல்
- விகாரைகளின் நிர்வாகத்தை சிறப்பாக முன்னெடுப்பதன் மூலம் சாசன மேம்பாட்டை ஏற்படுத்துதல்.

### 4.1.3 நடைமுறைப்படுத்தும் மாதிரி

2014 ஆம் வருடம் 12 மாவட்டங்களை மையமாகக் கொண்டு 125 விஹாரைகளின் 500 பிக்குமார்கள் கலந்து கொண்ட 12 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கு மேல திகமாக முதலாம் கட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய அறநெறித் தொடர்பாளர் களுள் தெரிவு செய்யப்பட்ட பிக்குமார்களில் 10 பேர் பங்குபற்றியவாறு அநுராதபுரம் மற்றும் கண்டி

மாவட்டங்களின் விஹாரைகள் 20ஐ மையமாகக் கொண்டு அற நெறி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

#### 4.1.4. செலவு விபரம்

2014 ஆம் வருடத்திற்கென ரூ. 3.0 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் 2014.12.31ஆம் திகதிக்கு 3.0 மில்லியன் ரூபாய்களும் இதன் பொருட்டு செலவு செய்யப்பட்டன..

### 4.2 சில்மாதாக்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 4.2.1 பின்னணி

புத்தசாசன ஜனாதிபதி ஆணைக்குழுவின் (2002) அறிக்கையில் குறிப்பிடப்படும் 7ஆம் அத்தியாயத்தின் 7 - 18ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி தச சில் மாதாக்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதன் பொருட்டு தங்குமிட வசதிகளுடன் கூடிய கல்வி நிலை யங்கள் தேவைக்கேற்ப நாடு முழுவதும் நிறுவப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. அவ்வாறே இவற்றில் கட்டாயமாக பாளி, சிங்களம், திரிபிடக புத்த தர்மம் என்பன கற்பிக்கப்படல் வேண்டும். பிரயோகக் கல்வியில் அவர்களுக்கான தங்குமிட நிர்வாகம், பழக்க வழக்கங்கள், அறநெறிக் உரையாடல்களை நடாத்துதல், பிரித் போதனை போன்ற விடயங்கள் கற்பிக்கப்படுதல் வேண்டும். இவர்களுக்கு குடும்பத்த வர்களுக்கான அறிவுரைகளை வழங்குதல், நோயாளிகளுக்கான சேவைகள், சமூக சேவைகள், சிறுவர் ஆரம்ப பாடசாலைகளை போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சிகள் பெற வாய்ப்புக்கள் வழங்குதல் வேண்டும். இவ்வாறான சேவைகளைப் நிறைவேற்றும் பொருட்டு பயனுள்ளவாறு ஈடுபடுத்தக் கூடிய சில்மாதாக்களை அவர்களின் அறிவு, திறமை என்பவற்றைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்தி வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கு வதானது ஒழுக்க மேம்பாடுடைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு செயற்படும் ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். மேற்கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டமானது அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

#### 4.2.2 அடிப்படை நோக்கம்

- சில்மாதாக்கள் ஆற்றும் சாசன, சமூக மற்றும் கல்விச் சேவைகளை உன்னத நிலைக்கு கொண்டு வருதல்
- சில்மாதாக்களின் சமய மற்றும் இலக்கண அறிவை மேம்படுத்தும் முகமாக நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தல்
- சில்மாதாக்களின் சமய மற்றும் சமூக சேவைகளை(குடும்பத்தவர்களுக்கான அறிவுரை களை வழங்குதல், நோயாளிகளைக் கவனித்தல், பாலர் பாடசாலை) போன்றவற்றை ஆற்றும் முக்கியமான பிரஜைகளாக மாற்றியமைப்பது
- சில்மாதாக்களின் அறநெறி அறிவு மற்றும் இலங்கைப் பௌத்த கலாசாரம் தொடர்பான அறிவை மேம்படுத்தல்.
- சில்மாதா ஆராமைகளில் நிலவும் பௌதீக வளங்களை மேம்படுத்தல்.

#### 4.2.3 செயற்படுத்தும் முறை

போதனைகள், பிரயோகச் செயற்பாடுகள் செவிப்புல மற்றும் கட்புல ஊடகங்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

#### 4.2.4 செலவு விபரம்

2014 ஆம் ஆண்டிற்கென ரூ. 1.734 மில்லியன்கள் நிதி செலவிடப்பட்டுள்ளது. (இணைப்பு 10ஐப் பார்க்கவும்.)

### 05. புனித பூமி அபிவிருத்தி

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2010 நவம்பர் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் புனித பூமி பிரதேசங்களை திட்டமிடுவது மற்றும் அபிவிருத்தி செய்வது போன்ற பணிகள் புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஒரு விகாரையை அல்லது இந்துக் கோயிலை அல்லது முஸ்லிம் பள்ளிவாசலை அல்லது கத்தோலிக்க தேவாலயத்தை தெரிவு செய்து அதனை வர்த்தமானியில் புனித பூமியாக பிரகடனப்படுத்துவதும் அதனை அபிவிருத்தி செய்வதும் அமைச்சின் பணியாகும். இதன் போது தேசிய பௌதிகவியல் திட்டமிடல் திணைக்களத்தின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. 1946ஆம் ஆண்டு 13ஆம் இலக்கத்தைக் கொண்டு (20 ஆம் அதிகாரம்) நகர மற்றும் கிராம நிர்மாணக் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) அத்தியாயம் 21(2) (ஆ) சரத்தின் கீழ் ‘‘நகர அபிவிருத்தி பிரதேசமாக’’ வர்த்தமானியினூடாக பிரகடப்படுத்தப்படும் பிரதேசம் புனித பூமி அபிவிருத்தி பிரதேசமாகக் கொள்ளப்படும்.

**இதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் கவனத்தில் எடுக்கப்படும்.**

01. தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற மதவழிபாட்டுத் தலங்கள் (இதற்கு உதாரணமாக அநுராதபுரம், திஸ்ஸமஹாராமை, மஹியங்கனை, களனி, தம்புள்ளை, தலவில தேவாலயம், திருக்கேதீஸ்வரம் கோயில் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்)
02. பிரதேச மட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற வழிபாட்டுத் தலங்கள் (இதற்கு உதாரணமாக எத்கந்த விகாரை, சமன் தேவஸ்தானம்(இரத்தினபுரி), பெல்லன்வில விகாரை, தேவத்தை தேவாலயம்,முன்னேஸ்வரம் கோயில் போன்றவற்றைக் குறிப்பிட லாம்)
03. புராதன தொன்மை வாய்ந்ததும் பழமையானதுமான மத வழிபாட்டுத் தலங்கள் ( இதற்கு உதாரணமாக மாளிகாவில விகாரை, தெல்கமுவை விகாரை, ரிதீ விகாரை, நெதிகம்வில விகாரை, தீகவாபி விகாரை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்)
04. பிரதேச மட்டத்தில் ஒவ்வொரு மத வழிபாட்டுத் தலத்தினாலும் மேற்கொள்ளப்படுகின்ற விசேட சமூக சேவைகளை கருத்திற் கொண்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் புனித பூமியாகப் பிரகடனப்படுத்தப்படும். வழிபாட்டுத் தலங்கள் (இதற்கு உதாரணமாக ரங்வல பஹன தேவஸ்தானம் (புவக்பிட்டிய) ஸ்ரீ வஜிராராமை (பம்பல பிட்டிய), ஸ்ரீ அபயாராமை (நாராஹேன்பிட்டி) பொகுனு விற்ற ரஜமஹா விகாரை (ஹொரணை) போன்றவற்றைக் குறிப்பிட முடியும்)

அதற்கமைய சமய முக்கியத்துவம், வரலாற்று முக்கியத்துவம், தொல் பொருள் முக்கியத் துவம், கலாசார முக்கியத்துவம், கட்டிட நிர்மாணம், சூழல் முக்கியத்துவம், பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் எனும் விடயங்களைக் கருத்திற் கொண்டு வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிதியுதவி வழங்கப்படுகின்றது.

2014ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட நிதி ரூ. 120 மில்லியன்கள் ஆகும். 2014.12.31ஆம் திகதிக்கு ரூ. 120 மில்லியன் நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

## 06.விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

### 6.1 2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு 2600 அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு குறைந்த வசதிகளைக் கொண்ட அறநெறிப் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய 2014ம் வருடத்தில் ரூ.88.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன் 2014.12.31 திகதியளவில் ரூ. 86.35 மில்லியன் அபிவிருத்திக்காக செல விடப்பட்டது. (அட்டவணை இலக்கம் - 11)

### 6.2 பௌத்த நாளேட்டினை அச்சிடுவதும் பகிர்ந்தளிப்பதும்

விகாரைகளில் வாசம் செய்யும் பிக்குமார்களின் உபயோகத்தின் பொருட்டு இந்த நாளேடு அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றது. தற்போது இலங்கையில் இயங்கி வரும் மூன்று நிக்காயாக்களின் தகவல்கள் மற்றும் அவற்றடன் இணைந்த ஏனைய நிக்காயாக்களின் தகவல்களுடன் அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையின் செயற்குழுச் சபையின் தகவல்கள் போன்ற பிக்குமார்களின் முக்கிய விபரங்கள் அடங்கிய தகவல்கள் உள்ளடக் கப் பட்டதாக இந்த நாளேடு வடிவமைக்கப்படுகின்றது.

இதனுடன் பிக்குமார்களுக்காகவே ஒழுங்கமைக்கப்பட்ட விஷேட குறிப்பேடு ஒன்றும் அச்சிட்டு வழங்கப்படுகின்றது. (அட்டவணை இலக்கம் - 12)

### 6.3 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

#### 6.3.1 பின்னணி

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமய வழி பாட்டுத்தலங்களை புனரமைப்புச் செய்தல் மற்றும் சமயப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துதல்.

#### 6.3.2 நோக்கம்

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சியுடன் இணைந்ததாக ஏற்படுத்தப்படும் பௌதீக அபிவிருத்தியுடன் பயன்களை சிறப்பாக பெற்றக் கொள்ளக் கூடிய சிந்தனை ரீதியில் மேம்பட்ட சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்.

#### 6.3.3 நடைமுறைப்படுத்தப்படும் விதம்.

மாவட்ட செயலாளரின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

#### 6.3.4 செலவு விபரம்

தேசத்துக்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கிடு செய்யும் போது 2014 ஆம் ஆண்டிற்கென ரூ.50 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன் 2014.12.31ஆம் திகதிக்கு விகாரைகள் அபிவிருத்திக்காக 35 மில்லியன் ரூபாய்களும் தேசத்துக்கு மகுடம் கண் காட்சிக் கூடத்துக்காக 35 மில்லியன் ரூபாய்களும் செலவு செய்யப்பட்டன.(இணைப்பு 13)

## 07. பின் இணைப்புக்கள்

### அட்டவணை இல – 01

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர் மற்றும் வெற்றிடங்கள் விபரம்
2014.12.31

| தொடர் இல. | பதவி | உரித்தாகும் சேவை | தரம் | அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | செயலாளர் | இல.நி.சே | விசேடம் | 01 | 01 | -- |
| 02. | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | இல.நி.சே | விசேடம் | 01 | 01 | -- |
| 03. | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | இல.நி.சே | விசேடம் | 01 | 01 | -- |
| 04. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இல.நி.சே | I | 04 | 03 (பதில் கடமை 1) | 01 |
| 05 | பணிப்பாளர் (அபிவிருத்தி) | இல.நி.சே | I | 01 | -- | 01 |
| 06. | பிரதான கணக்காளர் | இல.கண.சே | I | 01 | 01 | -- |
| 07. | உதவிச் செயலாளர் | இல.நி.சே | III | 04 | 02 | 02 |
| 08 | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | இல.திட்.சே | II / III | 01 | 01 | -- |
| 09 | கணக்காளர் | இல.க.சே | II/II , II/I | 01 | 01 (பதில் கடமை 1) | -- |
| 10 | கணக்காளர் (உள்ளக கணக்காய்வு) | இல.க.சே | | 01 | 01 | -- |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | முகா.உ.சே | மேற்தரம் | 01 | 01 (பதில் கடமை 1) | |
| 12 | மொழிபெயர்ப்பாளர் | மொ.பெ.சே | I | 01 | -- | 01 |
| 13 | செயலாளர்களின் இணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | -- | 01 | 01 | -- |
| 14 | வரவு செலவுத் திட்ட உதவியாளர்கள் | அண்மித்த சேவை | | 01 | - | 01 |
| 15 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | அண்மித்த சேவை | | 03 | 03 | - |
| 16 | அபிவிருத்தி உதவியாளர் | அண்மித்த சேவை | | 12 | 11 | - |
| 17 | திட்டமிடல் உதவியாளர் | அண்மித்த சேவை | | 01 | - | 01 |
| 18 | அபிவிருத்தி அதிகாரி | ஒன்றிணைந்த சேவை | | 90 | 39 | 51 |
| 19 | தொழில் நுட்ப உதவியாளர் | இல.தொ.சே | | 01 | - | 01 |
| 20 | அரச முகாமை உதவியாளர் | அ.மு.உ.சே | I.II.III | 31 | 21 | 10 |
| 21 | வரவேற்பாளர் | திணைக்களத்துக் குரிய | | -- | 01 | 01 |
| 22 | கமரா இயக்குநர் | தற்காலிகம் | | 01 | - | 01 |
| 23 | வீடியோ கமரா இயக்குநர் | தற்காலிகம் | | 01 | - | 01 |
| 24 | சாரதிகள் | சாரதிகள் சேவை | | 17 | 12 | 05 |
| 25 | கமரா இயக்குநர் உதவியாளர் | தற்காலிகம் | | 01 | 01 | -- |
| 26 | அலுவலக உதவியாளர்கள் | அலு.உ.சே I/II/III | | 16 | 14 | 02 |
| | குருந்தம்குளம் யாத்திரிகர் விடுதி | | | | | |
| 27 | நிலையப் பொறுப்பாளர் | மு.உ.சே | I | 01 | - | 01 |
| 28 | சமையற்காரர் | திணைக்களத்துக்குரிய | | 01 | 01 | - |
| 29 | தொழிலாளர் | திணைக்களத்துக்குரிய | | 01 | - | 01 |
| 30 | சுத்திகரிப்பாளர் | திணைக்களத்துக்குரிய | | 01 | - | 01 |
| **மொத்தம்** | | | | **198** | **117** | **83** |

**அட்டவணை இல. 02**

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கமைப்புக் குறிப்பு

**அட்டவணை இல– 03**

இலங்கையின் மதம் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மதகுருமார்களின் எண்ணிக்கை

| மதம் | மத வழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கை | | மதகுருமார்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2013 | 2014 |
| பௌத்தம் | 10,920 | 11,132 | 37,691 | 37,691 |
| இந்து | 5,766 | 6,051 | 1,196 | 1,196 |
| முஸ்லிம் | 2,081 | 1,898 | 4,513 | 4,513 |
| கிறிஸ்தவம் | 1,356 | 2,099 | 935 | 2,132 |
| | 20,123 | 21.180 | 44,335 | 45,532 |

**அட்டவணை இல – 04**

இலங்கையில் ஒவ்வொரு மதங்களையும் பிரிதிநிதித்துவப்படுத்தும் அறநெறிப் பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை

| மதம் | அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | | மாணவர்களின் எண்ணிக்கை | | ஆசிரியர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 |
| பௌத்தம் | 10,340 | 10,431 | 1,968,093 | 2,047,854 | 122,084 | 124,499 |
| இந்து | 1,714 | 1,887 | 158,453 | 285,067 | 7,486 | 9,407 |
| முஸ்லிம் | 555 | 565 | 76,000 | 96,000 | 4,146 | 4,659 |
| கிறிஸ்தவம் | 3,429 | 1,350 | 199,910 | 199,082 | 11,280 | 15,151 |
| **மொத்தம்** | 16,038 | 14,233 | 2,402,456 | 2,628,003 | 144,996 | 153,716 |

**அட்டவணை இல – 5**

2014. ஆண்டில் விகாரைகளுக்கு வழங்கப்பட்ட நிதி

| **தொடர் இல.** | **மாவட்டம்** | **விகாரைகளின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட நிதி (ரூ. மில்லியன்)** |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 08 | 0.95 |
| 02 | கம்பஹா | 05 | 0.80 |
| 03 | களுத்துறை | 04 | 0.50 |
| 04 | கண்டி | 08 | 1.10 |
| 05 | மாத்தளை | 02 | 0.30 |
| 06 | நுவரெலிய | 01 | 0.50 |
| 07 | காலி | 03 | 0.60 |
| 09 | ஹம்பாந்தோட்டை | 01 | 0.25 |
| 11 | திருகோணமலை | 01 | 0.20 |
| 12 | குருணாகல் | 05 | 1.00 |
| 13 | புத்தளம் | 18 | 2.15 |
| 14 | அநுராதபுரம் | 03 | 1.15 |
| 15 | பொலொன்னறுவ | 04 | 1.05 |
| 16 | பதுளை | 01 | 0.30 |
| 18 | இரத்தினபுரி | 01. | 0.05 |
| 19 | கேகாலை | 77 | 4.30 |
| | **மொத்தம்** | **142** | **14.2** |

**அட்டவணை இல – 06**

2014.12.31 திகதி வரை ரஜரட்ட யாத்திரிகர் விடுதியினால் கிடைக்கப்பெற்ற வருமானம்

| மாதம் | வருமானம் (ரூபாய்) | செலவு | பயனாளிகள் தொகை |
|---|---|---|---|
| ஜனவரி | 35,750.00 | 29,624.37 | 88 |
| பெப்ரவரி | 37,310.00 | 26,450.87 | 102 |
| மார்ச் | 28,550.00 | 60,857.00 | 110 |
| ஏப்ரல் | 17,080.00 | 23,537.98 | 56 |
| மே | 35,490.00 | 35,179.47 | 106 |
| ஜுன் | 66,120.00 | 71,906.48 | 261 |
| ஜுலை | 66,540.00 | 32,112.56 | 116 |
| ஆகஸ்ட் | 74,490.00 | 41,244.77 | 189 |
| செப்டெம்பர் | 42,460.00 | 34,458,17 | 118 |
| ஒக்டோபர் | 73,860.00 | 34,611.19 | 54 |
| நவம்பர் | 13,380.00 | 35,213.10 | 73 |
| டிசம்பர் | 39,140.00 | 24,572.26 | 61 |
| மொத்தம் | 530,170.00 | 449,717.78 | 1334 |

## அட்டவணை இல. 07

**புண்ணிய கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 73 கிராமங்களை அபிவிருத்தி செய்தல்**

| தொடர் இல் | மாவட்டம் | காவல் நிலையம் | பிரதேசச் செயலகப் பிரிவு | விஹாரஸ்தலம் |
|---|---|---|---|---|
| 1 | ஹம்பாந்தோட்ட | தங்காலை | தங்காலை | போதிருக்காராம |
| 2 | ஹம்பாந்தோட்ட | கட்டுவான | கட்டுவான | ஸ்ரீ பன்னாராம |
| 3 | ஹம்பாந்தோட்ட | மித்தெனிய | அங்குணுகொல பெலஸ்ஸ | சூரியபொக்குண ரஜ மஹா விஹார |
| 4 | ஹம்பாந்தோட்ட | அங்குணுகொல பெலஸ்ஸ | அங்குணுகொல பெலஸ்ஸ | வெலகத்வல் புராண ரஜ மஹா விஹார |
| 5 | ஹம்பாந்தோட்ட | ஹுங்கம | தங்காலை | பன்னாராம விஹாரய தலுன்ன |
| 6 | ஹம்பாந்தோட்ட | பெலி அத்த | பெலி அத்த | ஸ்ரீ விஜயாராமய |
| 7 | ஹம்பாந்தோட்ட | வலஸ்முல்ல | ஓகேவல | ஸ்ரீ ஜயதிலகாராமய |
| 8 | ஹம்பாந்தோட்ட | அம்பலந்தொட்ட | சூரியவெவ | ஹபரத்தவல புராண ரஜ மஹா விஹாரய |
| 9 | ஹம்பாந்தோட்ட | சூரியவெவ | சூரியவெவ | ஸ்ரீ தம்ம விஜயாராம விஹாரஸ்தானய |
| 10 | ஹம்பாந்தோட்ட | வீரகெற்றிய | வீரகெற்றிய | பில்லேவெல புராண விஹாரய |
| 11 | ஹம்பாந்தோட்ட | லுனுகம்வெஹெர | லுனுகம்வெஹெர | ஸ்ரீ ரதனசார பௌத்த நிலையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | ஹம்பாந்தோட்ட | ஹம்பாந்தோட்ட | ஹம்பாந்தோட்ட | ஸ்ரீ விசுத்தாரமய |
| 13 | ஹம்பாந்தோட்ட | கதிர்காமம் | கதிர்காமம் | வல்லிகந்தாரமய |
| 14 | ஹம்பாந்தோட்ட | திஸ்ஸமகாராம | திஸ்ஸமகாராம | உ த்தகந்தர ரஜமஹாவிஹாரய |
| 15 | மாத்தறை | மாத்தறை | வெலிகம | ஸ்ரீ ரதனதிலகாராமய |
| 16 | மாத்தறை | திக்வெல்லை | திக்வெல்லை | பப்பதாராமய |
| 17 | மாத்தறை | கந்தரை | தெவுந்தர | வனவாசல ரஜமஹா விஹாரய |
| 18 | மாத்தறை | வெலிகம | வெலிகம | பியரதனாராமய |
| 19 | மாத்தறை | திஹகொட | நாரங்கல | ஸ்ரீ தேவஜரிய விஹாரஸ்தானய |
| 20 | மாத்தறை | கம்பறுபிற்றிய | கம்பறுபிற்றிய | ஸ்ரீ பிரியதர்ஸனாராமய |
| 21 | மாத்தறை | ஹக்மன | ஹக்மன | ஸ்ரீ சாரிபுத்தாராம விஹாரய |
| 22 | மாத்தறை | ஊருபொக்க | பஸ்கொட | விஜேசேகராராமய |
| 23 | மாத்தறை | மாவரல | பஸ்கொட | ரொட்டும்ப புதுகல ரஜமஹாவிஹாரய |
| 24 | மாத்தறை | அக்குரஸ்ஸ | அக்குரஸ்ஸ | ஸ்ரீ தம்மாலோக விஹாரய |
| 25 | மாத்தறை | பிட்டபத்தர | பிட்டபத்தர | ஸ்ரீ தர்ம விஜயாராமய |
| 26 | மாத்தறை | கனங்கே | வெலிப்பிற்றிய | புஷ்பாராமய |
| 27 | மாத்தறை | தெனியாய | கொட்டபொல | இசிபதனாராமய |
| 28 | மாத்தறை | மொரவக்க | பிட்டபத்தர | கல்லென விஹாரய |
| 29 | காலி(எல்பிற்றிய) | எல்பிற்றிய | எல்பிற்றிய | தம்சர செனசுன விஹாரய |
| 30 | காலி(எல்பிற்றிய) | பிற்றிகல | எல்பிற்றிய | ஸ்ரீ போதி நிக்ரோதாராமய |
| 31 | காலி(எல்பிற்றிய) | கரந்தெனிய | கரந்தெனிய | ஸ்ரீ அபயதிஸ்ஸாராமய |
| 32 | காலி(எல்பிற்றிய) | ஊரகஸ் மங்ஹந்திய | கரந்தெனிய | பெத்தேஹேன விஹார ஸ்தானய |
| 33 | காலி(எல்பிற்றிய) | பத்தேகம | பத்தேகம | ஸ்ரீ சுதர்ஷனாராம விஹாராய |
| 34 | காலி(எல்பிற்றிய) | தெலிகட | ஹிக்கடுவ | கலதொட்ட விஹாரய |
| 35 | காலி(எல்பிற்றிய) | மீற்றியாகொட | அம்பலங்கொட | நாகருக்காராமய |
| 36 | காலி(எல்பிற்றிய) | அம்பலங்கொட | அம்பலங்கொட | ஸ்ரீ கங்காராம புராண விஹார ஸ்தானய |
| 37 | காலி(எல்பிற்றிய) | கொஸ்கொட | கொஸ்கொட | பொரலுகெற்றிய ஸ்ரீ சுமனா ராமய |
| 38 | காலி(எல்பிற்றிய) | பெந்தொட்ட | பெந்தொட்ட | ஸ்ரீ நந்தாராம விஹாரய |
| 39 | காலி(எல்பிற்றிய) | அஹுங்கல்ல | பலப்பிற்றிய | ஸ்ரீ சுதர்ஸனாராம விஹாரய |
| 40 | காலி (காலி) | காலி | காலி | தெல்லன்கொட ஸ்ரீ சுபத்ரா ராமய |
| 41 | காலி (காலி) | ரத்கமை | ரத்கமை | ஸ்ரீ விஜயராம விஹார ஸ்தானய |
| 42 | காலி (காலி) | அக்மீமனை | அக்மீமனை | ஸ்ரீ போதிமலு விஹாரய |
| 43 | காலி (காலி) | பொத்தல | பொத்தல | கஸ்தெணிய ஆரண்ய சேனாங்சய |
| 44 | காலி (காலி) | யக்கலமுல்ல | யக்கலமுல்ல | ஸ்ரீ தர்மோதய புராண விஹாரய |
| 45 | காலி (காலி) | வந்துறம்ப | பத்தேகம | அபினவாராமய |
| 46 | காலி (காலி) | ஹபறாதுவ | ஹபறாதுவ | சிரிவர்த்தனாராமய |
| 47 | காலி (காலி) | அஹங்கம | ஹபறாதுவ | ஸ்ரீ சுதர்ஸனாராமய |
| 48 | காலி (காலி) | காலித் துறைமுகம் | காலிப்பட்டணமும் சூழலும் | விஜித்தாராமய |
| 49 | காலி (காலி) | உடுகம | நாகொட | சிறி பிரதர்ஷனாராமய |
| 50 | காலி (காலி) | நாகொட | நாகொட | மாமனதொல ஸ்ரீ விஜேசிங்ஹாராமய |
| 51 | காலி (காலி) | ஹினிதும | தவலம | போசெவன விஹாரய |
| 52 | காலி (காலி) | நெலுவ | நெலுவ | ஸ்ரீ சுமேதாராம விஹார ஸ்தானய |
| 53 | இரத்தினபுரி | இரத்தினபுரி | தொடம்பே | விவேகாராமய |
| 54 | இரத்தினபுரி | வேவல்வத்த | பெல்மதுளை | ஸ்ரீ அபினவாராமய விஹார ஸ்தானய |
| 55 | இரத்தினபுரி | எஹலியகொட | எஹலியகொட | கிரவங்ஸாராம விஹார ஸ்தானய |
| 56 | இரத்தினபுரி | குருவிற்ற | எஹலியகொட | ஸ்ரீ அபினவாராமய விஹாரய |

| | | | | |
|---|---|---|---|---|
| 57 | இரத்தினபுரி | பலாங்கொட | பலாங்கொட | ஸ்ரீ விசுத்தாராம விஹாரய |
| 58 | இரத்தினபுரி | ஓபநாயக்க | ஓபநாயக்க | ஸ்ரீ சுதர்ஸனாராமய |
| 59 | இரத்தினபுரி | கல்தொட்ட | பலாங்கொட | லங்கா பப்பத்த விஹாரய |
| 60 | இரத்தினபுரி | வெலிகேபொல | வெலிகேபொல | ஹந்தகிறிய விஹார ஸ்தானய |
| 61 | இரத்தினபுரி | கஹவத்த | பெல்மதுளை | ஸ்ரீ சுகுணாராமய சீலாஸ்ரமய |
| 62 | இரத்தினபுரி | கஹவத்த | பெல்மதுளை | மீகஹலொவ புராண மஹ விஹாரய |
| 63 | இரத்தினபுரி | றக்வானை | கொடகவெல | ஸ்ரீ மெத்தாராம நிஸ்ஸங்க விஹாரய |
| 64 | இரத்தினபுரி | கொடகவெல | வெலிகேபொல | ஸ்ரீ போதி நிக்ரோதாராம விஹாரய |
| 65 | இரத்தினபுரி | உடவளவே | எம்பிலிப்பிற்றிய | ஸ்ரீ பன்சல்சந்த விஹார ஸ்தானய |
| 66 | இரத்தினபுரி | கிரிஎல்ல | கிரிஎல்ல | ஸ்ரீ அபினவாராமய விஹாரஸ்தானய |
| 67 | இரத்தினபுரி | அயகம | அயகம | ஸ்ரீ விஜயராம விஹார ஸ்தானய |
| 68 | இரத்தினபுரி | கலவான | கலவான | ஸ்ரீ குசுமருக்காராமய |
| 69 | இரத்தினபுரி | நிவித்திகல | நிவித்திகல | ஸ்ரீ அபினவாராமய விஹாரஸ்தானய |
| 70 | இரத்தினபுரி | எம்பிலிப்பிற்றிய | எம்பிலிப்பிற்றிய | காவந்திஸ்ஸபுர விஹாரய |
| 71 | இரத்தினபுரி | குட்டிகல | எம்பிலிப்பிற்றிய | தெருங்கட்டுவ ரஜ மஹா விஹாரய |
| 72 | இரத்தினபுரி | பனாமுரே | எம்பிலிப்பிற்றிய | இசிபத்தனாராம ரஜ மஹா விஹாரய |
| 73 | இரத்தினபுரி | கொலொன்ன | கொலொன்ன | ஸ்ரீ விசுத்தாராம விஹாரய |

**அட்டவணை இல – 08**

2014. ஆண்டில் புண்ணிய கிராம நிகழ்வின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்வுகளின் விபரம்

| **நிகழ்ச்சி இடம் பெற்ற மாவட்டங்கள்** | **நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை** | **நிகழ்ச்சி நடாத்தப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை** | **பங்குகொண்டோர்** |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | 60 | 329 |
| காலி | 01 | 60 | 231 |
| மாத்தறை | 01 | 52 | 245 |
| ஹம்பாந்தோட்டை | 01 | 60 | 245 |
| மொத்தம் | 04 | 232 | 1050 |

**அட்டவணை இல -09**

2014ஆம் வருடத்தின் போதைப் பொருள் ஒழிப்பு (மதட்ட தித்த) செயற்பாட்டின் முன்னேற்றம்

| | நிகழ்ச்சி விபரம் | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி (ரூபாய்களில்) | செலவாகிய நிதி (ரூபாய்களில்) |
|---|---|---|---|---|
| 01. | அரச அதிகாரிகளைப் பயிற்றுவித்தல் | 10 | 1,000,000.00 | 397,790.00 |
| 02. | கல்வி அமைச்சுடன் போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகள் (ஆசிரியரும் மாணவரும்) | 11 | 1,217,500.00 | 404,419,00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | உயர் கல்வி அமைச்சுடன் போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகள்(பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்) | 02 | 336,250.00 | 138,000.00 |
| 04. | பாதுகாப்புப் பிரிவினருடன் போதைப் பொருள் தடுப்பு செயற்பாடுகள்(பொலீஸ், சிவில் பாதுகாப்பு மற்றும் முப்படை அதிகாரிகள்) | 07 | 331,250.00 | 172,900.00 |
| 05. | சிறப்புத் தின செயற்பாடுகள் ( வருடாந்த ஊர்வலங்கள், வெசக் வைபவம், பொசன் வைபவம், எசல வைபவம் மற்றும் வேறு) | 06 | 100,000.00 | 97,500.00 |
| 06. | அறநெறிப் பாடசாலை அண்மித்த போதைப் பொருள் தடுப்பு செயற்பாடுகள் | 49 | 2,540,000.00 | 2,137,351.00 |
| 07. | நகரங்களை விழிப்புணர்வுச் செய்தலும் சட்டங்களை அமுலாக்கலும் | 10 | 76,500.00 | 25,000.00 |
| 08. | போதைப்பொருள் தவிர்ப்புக்கான சிறப்புச் செயற்பாடுகள் | 08 | 200,000.00 | 100,000.00 |
| 09. | சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கான நிகழ்ச்சித் திட்டம் | 01 | 200,000.00 | 35,500.00 |
| 10. | ஆன்மீக அழகியலுணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 04 | 220,000.00 | 30,000.00 |
| மொத்தம் | | 108 | 6,221,500.00 | 3,538,460.00 |

**அட்டவணை இல – 10**

2014.12.31 திகதி வரை சில்மாதாக்களின் ஆற்றல் மேம்பாட்டு நிகழ்வுகளின் பௌதீக மற்றும் நிதிநிலை வளர்ச்சி

| விடயம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் ரூ. மில்லியன் |
|---|---|---|
| | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | |
| சில்மாதா நிகழ்வுகள் | 01 | 0.134 |
| பிரிவெனாக் கல்வியை மேம்படுத்துவதற்காக | 05 | 1.6 |
| மொத்தம் | 06 | 1,734 |

**அட்டவணை இல 11**

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு குறைந்த வசதிகள் கொண்ட அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

| **தொடர் இல.** | மாவட்டம் | அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி (ரூபாய்களில்) |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 07 | 1,000,000.00 |
| 2 | களுத்துறை | 07 | 1,050,000.00 |
| 3 | கண்டி | 16 | 1,400,000.00 |
| 4 | கம்பஹா | 10 | 1,500,000.00 |
| 5 | இரத்தினபுரி | 05 | 650,000.00 |
| 6 | காலி | 03 | 450,000.00 |
| 7 | யாழப்பாணம் | 01 | 50,000.00 |
| 8 | பொலன்னறுவை | 01 | 150,000.00 |
| 9 | அநுராதபுரம் | 01 | 150,000.00 |
| 10 | குருநாகல் | 227 | 26,150,000.00 |
| 11 | புத்தளம் | 299 | 32,050,000.00 |
| 12 | கேகாலை | 297 | 32,550,000.00 |
| | **மொத்தம்** | **874** | **97,150,000.00** |

## அட்டவணை இல – 12

**விகாரைகளின் பௌத்த குறிப்பு நாளேட்டு அச்சிடுதல்**

| நாளேடுகளின் விபரம் | செலவு (ரூ.மில்) | நாளேடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| விகாரைகளுக்கான குறிப்பு நாளேடுகள் | 5.75 | 26500 |
| தொடர்புகளுக்கான விபர நாளேடு | 1.05 | 12500 |
| மொத்தம் | 6.80 | 39000 |

## அட்டவணை இல 13

**2014ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியுதவி**

| **தொடர் இல.** | மாவட்டம் | விகாரைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 26 | 07 |
| 02 | குருணாகல் | 108 | 14 |
| 03 | புத்தளம் | 16 | 02 |
| 04 | கோலை | 101 | 12 |
| | **மொத்தம்** | **251** | **35** |